# அதிசசிந்தனை

## ஒரு வார்த்தை சொல்லும் நான் குணம் பெறுவேன்



நோக்கம்:
குணமளிக்க உலகிற்கு அனுப்புதல்

நிகழ்வு:
கிறிஸ்துவின் திரு உடல்
திரு இரத்தப் பெருவிழா

சமூக ஊடக போக்கு:
#pmpttrustingod

**முன்னுரை:** உள்ளத்தை அள்ளும் வீர-தீரக் கதைகளும் சம்பவங்களும் எங்கும் காணக் கிடக்கின்றன. பினாங்கில், 26 ஆண்டு திருமண வாழ்க்கைக்குப் பின்னரும், மார்பகப் புற்றுநோய் கண்ட தமது மனைவியிடம் சென்று, ஹிஎன்னை திருமணம் செய்து கொள்வாயாஹீ எனக் கேட்ட மனிதனைப் போன்று இம்மாதிரியான சம்பவங்கள் அங்காங்கே நடக்கின்றன. ஜோகூரில், விபத்தில் சிக்கிக்கொண்ட கார் தீ ஏற்படும் முன்னர் அதிலிருந்த இருவரை வெளியே இழுத்த இளைஞனைப் போன்று. ஊமை ஒருவருக்காக ஒரு கிராமமே சமிஞ்சை மொழியைக் கற்றுக்கொள்ள வசதி ஏற்படுத்திய ஒரு தொலைத்தொடர்பு நிறுவனம் பற்றிய சம்பவமும் உண்டு உடற்பயிற்சிக்கு வருவதை நிறுத்திக் கொண்ட புற்றுநோயால் அவதிப்படும் சிறுவனைத் தத்தெடுத்துக் கொண்ட உடற்பயிற்சியாளரும் உண்டு. மேற்குறிப்பிடப்பட்ட மூன்று நபர்களும் நமக்கு ஓர் உந்துசக்தியாக இருக்கலாம். ஆயினும் இவற்றைப் படிப்பதும், அதன் பின்னர் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதும் என்பது இரு வெவ்வேறு விடயங்கள். தியாகம், அதுவும் மற்றவர்களுக்காக செய்வது எளிதான காரியமல்ல. நமது இல்லங்களில், சமூகத்தில், சமுதாயத்தில் எவ்வளவு சிறியதாயினும் நம்மாலும் இம்மாதிரியான அற்புதங்களைச் செய்ய முடியும். கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்த விழாவை இம்மாதம் கொண்டாடும் வேளையில், கிறிஸ்துவின் உடலில் நாமும் ஒரு பாகம் என்பதால் மற்றவர்களுக்கு அன்பு செலுத்தி தியாகம் செய்வது என்னவென்று காட்டுவோம். இதனால் இவ்வுலகிற்கு இயேசுவைப் போல் குணமளிப்பவராக இருப்போம்.



## இறுதிச் செபம்:

### வாரும் வாரும் இறைவா

வாரும் வாரும் இறைவா - எமை
ஆளும் ஆளும் தலைவா-2

1. வந்தீர் மனித உருவிலே
வருவீர் அப்ப வடிவிலே
தந்தீர் உயிரை மரத்திலே
தருவீர் உமது உடலையே (2)

2. அன்பில் நாளும் வளர்ந்திட
அறிவில் நாளும் ஓங்கிட
இருளை நாளும் கலைத்திட
எழுவீர் இதயப் பேழையிலே (2)

## முடிவு பாடல்:

### இயேசுவின் இருதயமே

இயேசுவின் இருதயமே
என்றும் எரிந்திடும் அருள் மயமே
உந்தன் ஆசியும் அருளும்
சேர்ந்து வந்தால்
எங்கள் ஆனந்தம் நிலை பெறுமே

1. இறைவனுக்கு இதயமுண்டு
அந்த இதயத்தில் இரக்கமுண்டு (2)
என்றும் இரங்கிடும்
இறைவன் இருப்பதனால்
எங்கள் அனைவருக்கும்
மகிழ்ச்சியுண்டு

2. கடவுளின் கருணையுண்டு - அந்த
கருணைக்கு உருவமுண்டு (2)
என்றும் உருவத்தில்
உயிர்த்தெழும் உயிரதனால்
எங்கள் உள்ளத்தில் உவகையுண்டு

3. பாவிக்குப் பொறுத்தல் உண்டு-அந்த
பரலோக வாழ்வுமுண்டு (2)
நாங்கள் கூவிடும் குரலைக்
கேட்பதற்கு
இந்த கோவிலில் தெய்வமுண்டு

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

## தொடக்கச் செபம்:

தொடக்கச் செபத்தைச் சொல்ல அதிச உறுப்பினர் ஒருவரை அழைக்கலாம்

## தொடக்கப் பாடல்:

கூடியிருக்கும் குழுவில் இருந்து வயதில் சிறியவரை வாசிக்க அழையுங்கள்:

அவர் அனைத்தையும் அறிவார்.
தம் மக்களின் தேவைகளை அவர் அறிவார்,
உதவி கேட்டு மன்றாடுபவரின் குரலை அவர் கேட்கிறார்,
அவர் ஆறுதல் அளிக்கின்றார், அவர் பாதுகாக்கின்றார்,
அவர் மன்னிக்கின்றார், அவர் குணமளிக்கின்றார்,
அவர் வழி நடத்துகின்றார், அவர் காப்பாற்றுகின்றார்.
அவரின் மந்தைகளில் ஒரு ஆடாக உன்னை அவர் தெரிந்துகொள்வாரா?
உன்னுடைய வாழ்வின் ஆண்டவராக அவரில் நீ நம்பிக்கை வைப்பாயா?
அப்படியென்றால் அவரின் வழி உன் வழியாக மாறட்டும்
உன் வார்த்தைகளில் மகிழ்ச்சி நிறையட்டும்
நம்பிக்கை உன் வழிகாட்டியாகட்டும்.
அவரின் புன்னகை உன்னிலும் உன் இல்லத்திலும் தங்கட்டும்
ஏனென்றால் ஆண்டவராகிய இயேசுவே நல்ல ஆயன்
பசும்புல் வெளிகளில் அவர் உன்னை நடத்துவார். உனக்கு எந்த குறையும் இருக்காது

## உரையாடல்:

ஜூன் மாதம், கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தம் விழாவைக் கொண்டாடுகிறோம். நற்கருணைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கும் விழா. கடைசி இராவுணவின் போது கிறிஸ்து 2,000 ஆண்டுகளுக்கு முன்பு நிலைப்படுத்திய நற்கருணையை நாம் ஏன் இன்னும் கொண்டாடுகிறோம்? “இதை என் நினைவாகச் செய்யுங்கள்” என இயேசு கூறியதால் நாம் செய்கிறோமா? கத்தோலிக்கத் திரு அவையில் நற்கருணையை பல்வேறு பெயர்களைக் கொண்டு அழைக்கிறோம்.

1) “நற்கருணை” என்பது தந்தையாகிய கடவுளுக்கு இயேசு தன்னையே அளித்தது நன்றிச் செயல்

2) “ஆண்டவரின் விருந்து” அல்லது “அப்பத்தைப் பிட்டு” என்பது நாம் விருந்தாடுகிறோம்

3) “திவ்விய நற்கருணை” என்பது அவரை உண்பதால் நாமும் கிறிஸ்துவும் ஒன்றாகிறோம்.

4) “திருப்பலி” என்பது நம் அனைவருக்கும் பணி உண்டு: “உங்கள் வாழ்வில் கடவுளை மகிமைப்படுத்த சென்று வாருங்கள்”



கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பின் நிலையான நினைவுகளைத் தருவது நற்கருணை. “இது உங்கள் மறைபொருள், பீடத்தில் மேல் வைக்கப்பட்ட உங்கள் வாழ்வின் மறைபொருள்” என 5ம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித ஆகஸ்தினார் கூறுகிறார். நற்கருணை, நமது நம்பிக்கையின் மறைபொருள், நமது எதிர்பார்ப்பின் மறைபொருள், நமது இரக்கச்செயலின் மறைபொருள். இயேசு செய்தது போல, மற்றவர்களுக்கு அன்பினால் தியாகம் செய்வது நமது கடமை என இது நினைவுப்படுத்துகிறது.

ஆதாரம்:
*https://www.vaticannews.va/en/church/news/2019-06/sunday-reflection.html*

### கலந்துரையாடுவோம்

- “இது உங்கள் மறைபொருள், பீடத்தில் மேல் வைக்கப்பட்ட உங்கள் வாழ்வின் மறைபொருள்” என புனித அகுஸ்தினார் கூறியதன் பொருள் என்ன? நற்கருணை “மறைபொருள்” என கூறப்படுவது ஏன்?
- “நற்கருணை, நமது நம்பிக்கையின் மறைபொருள், நமது எதிர்பார்ப்பின் மறைபொருள், நமது இரக்கச்செயலின் மறைபொருள்” என்பதன் பொருள் என்ன?
- அதிச, பங்கு, திரு அவையிலுள்ள பிறருடன் உங்கள் வாழ்வை இணைப்பதற்கும் நற்கருணை மறைபொருளுக்கும் என்ன தொடர்பு?

## இறைவார்த்தை:

### உரோமையர்: 12:1-8.

சகோதர சகோதரிகளே, கடவுளுடைய இரக்கத்தை முன்னிட்டு உங்களை வேண்டுகிறேன். கடவுளுக்கு உகந்த, தூய, உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள், இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு. இந்த உலகின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக, உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது என தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும். இறையருள் பெற்றவன் என்னும் முறையில் உங்களுள் ஒவ்வொருவருக்கும் நான் கூறுவது: உங்களுள் எவரும் தம்மைக் குறித்து மட்டுமீறி மதிப்புக் கொள்ளலாகாது. அவரவருக்குக் கடவுள் வரையறுத்துக் கொடுத்த நம்பிக்கையின் அளவுக்கேற்ப ஒவ்வொருவரும் தம்மை மதித்துக் கொள்ளட்டும். ஒரே உடலில் நமக்கு உறுப்புகள் பல உள. அந்த உறுப்புக்கெல்லாம் ஒரே செயலைச் செய்வதில்லை. அது போலவே, நாம் பலராயிருந்தாலும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் ஒரே உடலாய் இருக்கிறோம்; ஒருவருக்கொருவர் உடனுறுப்புகளாய் இருக்கிறோம். ஆயினும், நமக்கு அளிக்கப்பட்டுள்ள அருளுக்கேற்ப வெவ்வேறு அருள்கொடைகளைப் பெற்றுள்ளோம். இறைவாக்குரைக்கும் கொடையை நாம் பெற்றிருந்தால் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு ஏற்றவாறு அதைப் பயன்படுத்த வேண்டும். தொண்டாற்றும் கொடையை நாம் பெற்றிருந்தால் அதைத் தொண்டு புரிவதற்குப் பயன்படுத்த வேண்டும். கற்றுக் கொடுப்போர் கற்றுக் கொடுப்பதிலும், ஊக்கமூட்டுவோர் ஊக்கம் தருவதிலும், தமக்குள்ளதை வழங்குவோர் தாராளமாய்க் கொடுப்பதிலும், தலைமை தாங்குவோர் முழு ஆர்வத்தோடு செயல்படுவதிலும், இரக்கச் செயல்களில் ஈடுபடுவோர் முகமலர்ச்சியோடு அவற்றைச் செய்வதிலும் தாம் பெற்ற கொடைகளைப் பயன்படுத்த வேண்டும்.

### சிந்தனை:

- வாசகத்தைச் சத்தமாக வாசித்து திறந்த மனத்தோடு கேட்கவும்.
- வார்த்தையோ வசனமோ உங்கள் மனதைத் தொடும் வரை மௌனமாக இதை வாசிக்கவும்.
- அந்த வார்த்தை அல்லது வசனம் வழி உங்களுக்கு தூய ஆவியார் சொல்வது என்ன?
- ஆண்டவரின் குரலுக்கு நீங்கள் கூறும் பதில் என்ன?
- சிறிய குழுக்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள் (3-4 பேர்)

### செயல்:

- உங்களுக்கு அல்லது மற்றவர்களுக்குக் குணமளிப்பை வழங்க தங்களது கொடையைப் பயன்படுத்திய உங்களுக்குத் தெரிந்தவர்கள் பற்றி பகிர்ந்து கொள்ளுங்கள்.
- வரும் மாதத்தில் உங்கள் அதிசவிலும் அண்டை-அயலாரிடம் குணமளிப்பு வழங்க உங்களது ஆன்மீகக் கொடைகளை எந்த வகையில் பயன்படுத்தியுள்ளீர்கள்.